# பரிசில் தின அதிபர் அறிக்கை
# 2023

## யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம்
## ஆனைக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இலட்சினை

### நோக்கக்கூற்று (Vision)

நவீன உலகிற்கேற்ப மாணவர்களது ஆற்றல்களை விருத்தி செய்து நல் மனப்பாங்குள்ள சிறந்த சமூகத்தை உருவாக்குதல்.

### பணிக்கூற்று (Mission)

கல்வியின் தேசிய இலக்குகளிற்கு அமைய ஒவ்வொரு மாணவர்களதும் ஆளுமையை இனங்கண்டு விழுமியப்பண்புகளுக்கு அமைய சிறந்த பிரஜையாக உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்தினம் - 2023



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- கொடியேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம் - இந்து , கிறிஸ்தவம்
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்
- ஆசியுரை
- அதிபரின் பரிசுத்தின அறிக்கை
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர்கள் உரை
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை
- பாடசாலைக்கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

யா/ உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்தின் பரிசில் தினத்தை முன்னிட்டு அதற்குரிய ஆசிச்செய்தியை வழங்குவதையிட்டு அகமிக மகிழ்வடைகிறேன்.

மேற்படி பாடசாலையில் வருடந்தோறும் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள் மற்றும் கோட்டம் மற்றும் வலய மட்டத்தில் விளையாட்டுப்போட்டிகள், கல்வித்துறை சார்ந்த ஏனைய நிகழ்வுகளில் பங்குபற்றி பாடசாலைக்கு மட்டுமன்றி கிராமத்துக்கும் பெருமை சேர்த்த மாணவ மணிகளை கௌரவித்து சிறப்பித்து பரிசளித்து வருவது பராட்டப்படவேண்டிய விடயம்.

இவ்வாறு பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களை பரிசளித்து உற்சாகப்படுத்துவதன் மூலம் பரிசுபெற்ற மாணவர்கள் மட்டுமின்றி ஏனைய மாணவர்களும் இவ்வாறு பரிசு பெற வேண்டும் பராட்டப்பட வேண்டும் என மென்மேலும் செயற்பட இந்நிகழ்வு ஓர் உந்துசக்தியாக அமையுமென்றால் அது மிகையாகாது. இதனால் அவர்கள் வருங்காலத்தில் சாதனைகள் பல புரியவும் சமுகத்தில் நல்ல பிரசைகளாக வாழவும் வழி ஏற்படும் என்பது திண்ணம்.

இச் செயற்பாடுகளை காலத்தின் தேவையறிந்து தொலைநோக்குப்பார்வையுடன் வருடந்தோறும் சிறப்பாக செயற்படுத்தி வரும் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் தனது அருளை வாரி வழங்குவார் என்பது திண்ணம். இது போன்ற தங்களின் அர்ப்பணிப்பான சேவை என்றும் தொடரவும் அவை சிறப்பாக அமையவும் மீண்டும் பெருமானைப் பிரார்த்தித்து விழா தொடர்பான அனைத்து விடயங்களை ஏற்பாடு செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் ஆசியைக்கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

பொதுப்பணியில்
சோம. சிவகுமாரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

ஒரு பாடசாலையின் நாட்காட்டியில் குறிப்பிடப்படும் நிகழ்வுகளில் பரிசில் தின நிகழ்வு முக்கியமானதாகும். இது பாடசாலையின் வினைத்திறனையும் விளைதிறனையும் காட்டி நிற்கும் ஒரு சுட்டி எனலாம். இந் நிகழ்வில் வருடம் முழுவதிலும் மாணவர்கள் பெற்ற கல்வியினதும் இணைப்பாடவிதான செயற்பாடுகளினதும் பெறுபேறுகளுக்கான வெகுமதிகள் வழங்கப்படுகின்றன. இது மாணவர்களை ஊக்குவிக்கின்ற நிகழ்வாகவும் அமைந்திருக்கின்றது. பரிசு பெற்ற மாணவர்களை பாராட்டுவதும் பரிசு பெறாத மாணவர்களை அடுத்த பரிசளிப்பு விழாவில் பரிசு பெற முன்னோக்கி நகர்வதும் இதன் நோக்கமாகும்.

அந்த வகையில் யா/ உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. இம் முறையும் பரிசளிப்பு விழாவை நடாத்த அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் முயன்றுள்ளமை பாராட்டத்தக்கது. அவர்களுடைய முயற்சி இன்று கைகூடியுள்ளது. எனவே இவ்விழா சிறக்க எல்லாம் வல்ல ஆண்டவரை பிரார்த்தித்து பரிசு பெறும் மாணவர்களையும் பரிசு பெறத்துடிக்கும் மாணவர்களையும் ஆசீர்வதித்து எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

அருட்பணி
P. தேவராசா
தூய, அந்திரேய ஆலயம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ உயரப்புரம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்தின் 2023ஆம் ஆண்டு முதல்வரின் பரிசில் தின அறிக்கை

இன்றைய பரிசளிப்பு விழாவில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற சமயக்குருமார்களே, மதிப்புக்குரிய பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே , கௌரவ விருந்தினர் அவர்களே, அயற்பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர் அவர்களே, நாளைய தலைவர்களாக இவ் உலகை ஆளப்போகும் மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது இனிய வணக்கங்கள் உரித்தாகட்டும்.

## மதிப்புக்குரிய பிரதம விருந்தினர் உயர்திரு திரு பொன்னையா ரவிச்சந்திரன் (கல்விப்பணிப்பாளர், யாழ் வலயம்) அவர்களே

தாங்கள் பல்வேறு படிநிலைகளில் சேவையாற்றி சிறந்த பணிப்பாளர் என்ற பெருமைக்குரியவர். எமது வித்தியாலய பரிசில் தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

மகத்தான இந்நாள்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து எம்மை கௌரவப்படுத்திக்கொண்டிருக்கும் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு பொன்னையா ரவிச்சந்திரன் அவர்கள் பொன்னையா சற்குணவதியம்மா தம்பதியினரின் தவப்புதல்வனாகப் பிறந்தார். இவர் கல்வி மீதும் கலைகள் மீதும் தீராத பற்றுக் கொண்டவராக மாணவர்களை, கற்றலை நோக்கி வழிநடத்துதலில் ஆளுமை பெற்றவராகத் திகழ்வதோடு இறை சிந்தனையும் கொண்டவர்.

தன் வாழ்வில் ஆசிரியராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக, வலயக்கல்விப்பணிப்பாளராக தன் கடமையை திறம்பட ஆற்றிய, ஆற்றி வருகின்ற பெருமையுடையவர்.

பணிப்பாளர் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் திருகோணமலை புனித சவேரியார் கல்லூரியிலும் கற்றார். தனது இடைநிலைக்கல்வியை யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்று இளவணிகமாணிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர்.

ஆசியரிராக யா/அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் தனது முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பணிப்பாளர் அவர்கள் தொடர்ந்து யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராக சேவையாற்றினார். தனது சேவைக்கு உரமூட்டும் வகையில் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி பட்டத்தையும் பெற்றுத் தனது அறிவுப்புலத்தை விரிவாக்கினார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்திய பணிப்பாளர் அவர்கள் 13.07.2007 அன்று நியமனம் பெற்று கல்வி நிர்வாக சேவையில் தனது பணியைத் தொடர்ந்தார். இவரது சேவைகள் வடமாகாணத்தில் பல வலயங்களை உள்ளடக்கியதாக சிறப்பெய்தின. குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம், தென்மராட்சி, யாழ்ப்பாணம், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் என்பவற்றில் பிரதிக்கல்விப்பணிப்பாளராகவும் துணுக்காய் கல்வி வலயம், தீவகக் கல்வி வலயம், வலிகாம கல்வி வலயத்தினைத் தொடர்ந்து யாழ்ப்பாண கல்வி வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளராகவும் பிரகாசிக்கும் உன்னத சிறப்பையும் வழங்குகின்றார். இவரது வலயக்கல்விப்பணிப்பாளர் சேவைகள் இன்றும் துணுக்காய் வலயம், தீவக வலயம், வலிகாம வலயம் என்பவற்றில் மங்காது பட்டொளிவீசி நிற்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது. இவர் பிரதம விருந்தினராக இந்நிகழ்விற்கு வருகை தந்தமையையிட்டு பேரானந்தம் அடைகின்றேன்.

## மதிப்புக்குரிய சிறப்பு விருந்தினர் திரு துரைவீரசிங்கம் துஷ்யந்தன் ( ஆசிரிய ஆலோசகர் SLTAS I மற்றும் பதில்உதவிக்கல்விப்பணிப்பாளர், அழகியல் வலயக்கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம்) அவர்களே

தங்களை வரவேற்றுக்கொண்டு தாங்கள் ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உங்கள் ஆரம்பக்கல்வியை யா/ஊரெழு கணேச வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை யா/கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் கற்றீர்கள். உங்களுடைய முதல் ஆசிரியப்பணியை யா/ இந்துக் கல்லூரியில் கடமையேற்றீர்கள். அத்துடன் ஆசிரியர் பயிற்சியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்று நிறைவு செய்தீர்கள். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வியையும் முதுகல்விமாணியையும் உங்கள் வாண்மையை விருத்தி செய்துள்ளீர்கள். மேலும் மேலதிக செயற்பாடுகளாக தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் வழிகாட்டி தயாரிப்பதற்கான வளவாளர் மற்றும் சித்திர பாடம் தொடர்பான பல நூல்களையும் எழுதி மாணவர்களின் கற்றல் விருத்திக்கு பணியாற்றி வருகின்றீர்கள். எனவே இந்த சமுகத்திற்கு சிறந்த மனித வளமாகத் திகழ்வது கண்டு வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## அடுத்து எமது பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கு வருகைதந்திருக்கும் திருமதி சுசிலாமணி பஞ்சலோகரஞ்சன் (ஓய்வு நிலை ஆசிரியர், பழைய மாணவி) அவர்களே,

தங்களை எமது பாடசாலையின் பரிசில் தின நிகழ்விற்கு வரவேற்றுக்கொண்டு தாங்கள் ஆரம்பக்கல்வியை எமது பாடசாலையான யா/ உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்திலும் இடைநிலைப்பிரிவை யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் க. பொ .த உயர்தரத்தினை யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்று பின்பு ஆசிரியநியமனம் பெற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சமூகக்கல்வி ஆசிரியராகப் பயிற்றப்பட்டுள்ளீர்கள். தாங்கள் இப் பாடசாலையில் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு நிகழ்வுகளுக்கு நிதிப்பங்களிப்பினை வழங்கி விளையாட்டு நிகழ்வு சிறப்புற நிகழ உதவி வருகிறீர்கள் உங்கள் உறவினரின் ஆதரவுடன் பாடசாலைக்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் தாகம் தீர்க்கும் பணியைச் செய்துள்ளீர்கள். உங்களது அரிய பணி மேலும் தொடர வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## மதிப்புக்குரிய கௌரவ விருந்தினர்களே

எமது பரிசில்தினத்தில் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். திருமதி நிரோசினி றொசான் (குடும்ப நல உத்தியோகத்தர், பழைய மாணவி) திரு பாலசிங்கம் சுரேஸ் (தலைவர், முன்பள்ளி காக்கைதீவு) திரு இரத்தினசிங்கம் சிறி (தலைவர் கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம்) நீங்கள் ஆற்றிவரும் சமுக சேவையினால் பலதரப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்து வருகிறீர்கள். எமது பாடசாலைக்கும் உங்கள் சேவைகள் தொடரவேண்டும் என்பதில் எதிர்பார்ப்புடன் உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாறு

எமது பாடசாலை மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட கல்விப்பாரம்பரியம் மிக்க ஓர் பாடசாலையாகும். 1876 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்னும் சில ஆண்டுகளில் 150 வது வருடத்தை பூர்த்திசெய்யவுள்ளது. இது தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்கள் கொண்ட வகை II பாடசாலையாகும். சிறந்த பௌதீக வளத்துடனும் துடிப்பு மிக்க ஆசிரிய வளத்துடனும் உழைப்பு மிக்க கல்வி சாரா ஊழியர்களுடன் இணைந்த ஓர் வளர்ந்து வரும் பாடசாலையாகும். இங்கு கற்க வரும் மாணவர்கள் அனேகர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பப்பின்னணியை சேர்ந்த ஆபத்து விளிம்பில் உள்ள மாணவர்கள். இவர்களின் குடும்ப பொருளாதார நலிவு காரணமாக வீடுகளில் சிறந்த கற்றல் சூழலை வழங்க முடியாத நிலை காணப்படுவதை பல்வேறு சந்தர்ப்பங்களில் எம்மால் இனங் காணக்கூடியதாக இருக்கின்றது. கற்றலுக்கு வறுமை ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் மாணவர்களின் கற்றல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு சிறந்த கவின்நிலை ஏற்படுத்தப்பட்டு கற்றல் செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் காணப்படும் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு ஏற்றவிதத்தில் எளிய பயிற்சிகள் மூலம் மொழி அறிவு விருத்தி செய்ய அடிப்படையில் இருந்து கற்பித்தல் செயற்பாடுகள் விசேடமாக திட்மிடப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றது.

இத்துடன் மாணவர்களினால் அமைக்கப் பெற்ற ஆக்கச் செயற்பாடுகள் , ஒப்படைகள் கொண்ட சுவரொட்டிகளின் காட்சிப்படுத்தல்கள் மாணவர்களுக்கு சிறந்த தன்னம்பிக்கையை வளர்க்கின்றது. தரமான உள்ளீட்டுப் பொருட்களின் உச்சப் பயன்பாடும் ஆசிரிய வளத்தின் உச்சமான வேலைப்பகிர்வுகளின் மூலமும் அரச நிதிகள் பொருத்தமான வகையில் பயன்படுத்தப்படுகின்றன. தரம் 5, 10 மற்றும் தரம் 11 ஆகிய வகுப்புகளுக்கு வழமையான கற்றல், செயற்பாட்டுடன் எமது ஆசிரியர்களால் மேலதிக வகுப்புக்கள் நடைபெற்று வருவதுடன். திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப் பெற்ற மாணவர் உயர்மட்ட செயற்றிட்டங்கள் , பாசறை நிகழ்வுகள், கணித, சுற்றாடல் முகாம்கள், வளவாளர்களின் செயற்பாடுகள், சுற்றாடல் தினம், பாடரீதியான கண்காட்சி செயற்பாடுகள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவையும் நன்கு திட்டமிட்டு செயற்படுத்துவதன் மூலம் கற்றலில் பல முன்னேற்றங்களை இப் பாடசாலை பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள்

1. செயலாளர் நாயகம் :- திரு. கா . இரவீந்திரராசா
2. பிரதிச் செயலாளர் நாயகம் :- திருமதி தி நவநீதகாந்தன் (நிர்வாகம்)
3. பிரதிச் செயலாளர் நாயகம் :- திரு க. சாந்தகுமார் (அபிவிருத்தி)
4. பிரதிச்செயலாளர் நாயகம் :- செல்வி சி. மாலதி (ஒழுக்கம்)

- ♣ சபா நாயகர் :- ச. சகிசன்
- ♣ பிரதமர் :- சி. லாமதி
- ♣ பிரதி சபாநாயகர் :- சி. சோழநிலவன்
- ♣ பிரதிச் செயற்குழு தலைவர் :- ஜெ. ஜெனிஸ்ரன்
- ♣ அமைச்சர்கள்
- ♣ இவர்கள் தலைமையில் மாணவர் பாராளுமன்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் தங்கள் செயற்பாடுகளை பொறுப்பாசிரியர்களின் தலைமையில் செவ்வனே செயற்பட்டு வருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழாம்

| இல | நிரந்தர ஆசிரியர்கள் | பாடம் / பொறுப்புக்கள் |
|---|---|---|
| 1. | திரு. காசிப்பிள்ளை ரவீந்திரராசா | அதிபர் |
| 2. | செல்வி. மாலதி சிவராசா | ஆரம்பக் கல்வி |
| 3. | செல்வி. அனுசா ஜெகஜோதி | நடனம் |
| 4. | திருமதி. சுகந்தா பாலேஸ்வரன் | ஆரம்பக் கல்வி |
| 5. | திருமதி. பாலசரஸ்வதி சுப்பிரமணியசிவம் | ஆரம்பக் கல்வி |
| 6. | திரு. கந்தசாமி சாந்தகுமார் | கணிதம் |
| 7. | திரு. பொன்னுத்துரை நாகேந்திரா | ஆங்கிலம் |
| 8. | திருமதி. சத்தியரூபி அருள்ராசா | ஆரம்பக் கல்வி |
| 9. | திருமதி. ஜீவனா விஸ்ணுவர்த்தனன் | சங்கீதம் , குடியியல் |
| 10. | திருமதி. திருமகள் நவநீதகாந்தன் | சைவநெறி ,புவியியல் |
| 11. | திரு. கிருஸ்னசாமி ஸ்ரீகரன்ஜி | ஆரம்பக் கல்வி |
| 12. | திருமதி. ஜெயகௌரி தயாபரன் | தமிழ் |
| 13. | திரு. செல்லன் பதீஸ்ராஜா | சித்திரம் , சிங்களம் |
| 14. | திரு. கணேசலிங்கம் செல்வராசா | விஞ்ஞானம் |
| 15. | திரு. செந்தில்நாதன் சனந்தன் | விஞ்ஞானம் |
| 16. | திருமதி. கல்யாணி அரவிந்தன் | கணிதம் |
| 17. | திருமதி. சிவபாமா சிவகுமார் | வணிகம், PTS |
| 18. | திரு.வீரகத்திப்பிள்ளை சேந்தன் | ICT |
| 19. | திருமதி. செல்வதரிசினி லெனின்ஸ் | ஆரம்பக் கல்வி |
| 20. | திரு. சின்னப்பு சிறிசுதாகரன் | ஆரம்பக் கல்வி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21. | திருமதி. சிவலலிதா சிவரஞ்சன் | வரலாறு, குடியியல் |
| 22. | திருமதி.மேரிகலிஸ்ரா ரெறோன் பீற்றர் | கிறிஸ்தவம்,<br>வழிகாட்டல் ஆலோசனை |
| 23. | திரு. துரையப்பா கௌரிபாலன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 24. | திருமதி. சாமினி சிவராஜ் | விஞ்ஞானம் |
| 25. | திரு.கந்தையா உதயகுமார் | ஆரம்பக்கல்வி |
| 26. | திருமதி. றஜனி விஜயராசா | நடனம் |

## பகுதிநேர ஆசிரியர்

| இல | ஆசிரியர் | பாடம் |
|---|---|---|
| 1 | திரு வீ. சேந்தன் | தகவல் தொழிநுட்பம் |

## துணை ஆளணியினர்

| | | |
|---|---|---|
| 1 | திரு. ஆ. நேசகுமாரன் | இரவுக்காவலாளி |
| 2 | திருமதி சி. தனுசா | விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர் |
| 3. | செல்வி இ. லக்சிகா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |

## இடம் மாற்றம் பெற்றுச் சென்றோர்

01. திருமதி ஜெ. முகுந்தன் – ஆசிரியர்

02. திரு சி. கர்ணன் – ஆசிரியர்

03. திரு ம. சயந்தரூபன் – ஆசிரியர்

04. திருமதி. ஞா. சிவனேஸ்வரி – ஆசிரியர்

## ஓய்வு பெற்றுச் சென்றோர்

01 .திரு இரா. தர்மரட்ணம் – ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையிலுள்ள குழுக்கள் 2023

## முகாமைத்துவக்குழு

| | |
|---|---|
| 1. திரு. கா. ரவீந்திரராசா | (அதிபர்) |
| 2. செல்வி. சி. மாலதி | (உப அதிபர்) |
| 3. திரு. க. சாந்தகுமார் | (ஆசிரியர்) |
| 3. திருமதி. ரெ. மேரிகலிஸ்ரா | (ஆசிரியர்) |
| 4. திரு. சு. பாலசரஸ்வதி | (ஆசிரியர்) |
| 5. திருமதி. வி. ஜீவனா | (ஆசிரியர்) |
| 6. திரு. க. செல்வராசா | (ஆசிரியர்) |
| 7. திருமதி. ச . அருள்ராசா | (ஆசிரியர்) |
| 8. திருமதி . அ. கல்யாணி | (ஆசிரியர்) |

## ஒழுக்காற்றுக்குழு

| | |
|---|---|
| 1. திரு. கா. ரவீந்திரராசா | (அதிபர்) |
| 2. செல்வி சி. மாலதி | (உப அதிபர்) |
| 3. திருமதி. ரெ. மேரிகலிஸ்ரா | (ஆசிரியர்) |
| 4. திரு. சி. ஸ்ரீசுதாகரன் | (ஆசிரியர்) |
| 5. திருமதி. சு. பாலசரஸ்வதி | (ஆசிரியர்) |
| 6. திருமதி தி. நவநீதகாந்தன் | (ஆசிரியர்) |
| 7. திருமதி. ச . அருள்ராசா | (ஆசிரியர்) |

## கட்டாயவரவுக்குழு

| | |
|---|---|
| 1. திரு. கா. ரவீந்திரராசா | (அதிபர்) |
| 2. செல்வி சி. மாலதி | (உப அதிபர்) |
| 3. திரு. பொ. நாகேந்திரா | (ஆசிரியர்) |
| 4. திரு. கி . ஸ்ரீகரன்ஜி | (ஆசிரியர்) |
| 5. திருமதி. ச. அருள்ராசா | (ஆசிரியர்) |
| 6. திரு. க. செல்வராசா | (ஆசிரியர்) |
| 7. செல்வி. கு. நவசாயினி | (மாணவி) |
| 8. செல்வன். நி. தனுசன் | (மாணவன்) |
| 9. திருமதி. க. மைதிலி | (பெற்றோர்) |
| 10. திருமதி. பா. நல்சினிகா | (பெற்றோர்) |
| 11. செல்வி. தே. டிலானி | (பழையமாணவி) |
| 12. திரு. கு. றஜீவன் | (பழையமாணவன்) |
| 13. திரு . ச. றொசான் | (பழையமாணவன்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திக்குழு

1. திரு. கா. ரவீந்திரராசா (அதிபர்)
2. செல்வி. சி. மாலதி (உப அதிபர்)
3. திரு க. சாந்தகுமார் (ஆசிரியர்)
4. திருமதி. சி. சிவலலிதா (ஆசிரியர்)
5. திரு. செ. பதீஸ்ராஜா (ஆசிரியர்)
6. திருமதி. வி. ஜீவனா (ஆசிரியர்)
7. திருமதி. ரெ. மேரிகலிஸ்ரா (ஆசிரியபிரதிநிதி)
8. திருமதி. ந. திருமகள் (ஆசிரியபிரதிநிதி)
9. செல்வி . கு. டனுசியா (பழையமாணவி)
10. திரு. யோ. ரதீபன் (பழையமாணவன்)
11. திருமதி . சர்வேஸ்வரி (பெற்றோர்)
12. திரு. ர. சக்திவேல் (பெற்றோர்)
13. திருமதி ச. பவானி (பெற்றோர்)
14. திருமதி. கு. சிந்துஜா (பெற்றோர்)

## பழையமாணவர்கள்

| | |
|---|---|
| தலைவர் | :- திரு. க. ரவீந்திரராசா |
| உப தலைவர் | :- திருமதி. விக்டோரியா எல்லிஸ் பிரஸ்லி |
| செயலாளர் | :- திரு. க. ஜெயச்சந்திரன் |
| உப செயலாளர் | :- திரு. இ. றொசான் |
| பொருளாளர் | :- திரு. இ. விஜயகுமார் |
| ஆசிரியர்கள் | :- செல்வி. சி. மாலதி |
| | திருமதி. வி. ஜீவனா |
| நிர்வாக உறுப்பினர் | :- திருமதி. சத்தியா ரவீந்திரன் |
| | திருமதி. சு. சிவசக்தி |
| | திரு. இ. ராஜ்கரன் |
| | திரு. கு. றஜீபன் |
| | திரு. பி. ஜெனிஸ்ரன் |
| | செல்வி. S. கயானி |
| | திருமதி ஜெ. ஜெசாந்தினி |
| | திரு. A. ஜெகசூரன் |
| | திரு. M. ரஜீதன் |
| | செல்வி. சி. நளினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி கண்காணிப்புக்குழு

1. செல்வி. சி. மாலதி (உப அதிபர்)
2. திருமதி. அ. கல்யாணி (ஆசிரியர்)
3. திருமதி. ந. திருமகள் (ஆசிரியர்)
4. திரு க. சாந்தகுமார் (ஆசிரியர்)
5. திருமதி. ரெ. மேரிகலிஸ்ரா (ஆசிரியர்)

மாணவர்களின் அறிவு ஆளுமை விருத்தியினை மேம்படுத்தும் வகையில் நன்கு திட்டமிடப்பட்டு மேடை நிகழ்வுகள், போட்டிகள் நடாத்தப்பட்டு வருவதுடன் வரவு ஒழுங்கு பாடசாலைத் தூய்மை பேணல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டு சுகாதார மேம்பாடுடைய பாடசாலையாகத்திகழ்ந்து வருவது பலரின் பாராட்டுக்குரியதாக விளங்குகின்றது. இங்கு நடைமுறையிலுள்ள மன்றங்களாக பின்வருவன செயற்படுகின்றன.

01. தமிழ் மன்றம்
02. கணித விஞ்ஞான மன்றம்
03. சுகாதரர மன்றம்
04. இந்துமாமன்றம்
05. ஆங்கிலமன்றம்
06. கவின்கலை மன்றம்
07. கிறீஸ்தவ மன்றம்
08. சமூகவிஞ்ஞான மன்றம்
09. உடலாளர் மன்றம்
10. ஆரம்ப பிரிவு மாணவர் மன்றம்
11. அனர்த்த முகாமைத்துவ மன்றம்
12. சகபாடி மத்தியஸ்தர் சபை

போன்ற மன்றங்கள் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்கால நோக்கு

- 2025ஆம் ஆண்டில் க. பொ. த உயர்தர கலைப்பிரிவினை ஆரம்பித்தல்
- எழுத வாசிக்க இடர்படும் மாணவர்களின் நிலையினை மாற்றுதல்
- பெற்றோருக்கு கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- ஒழுக்க சீலரான மாணவமணிகளை உருவாக்கல்.
- e –learning முறையில் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- மெய்வல்லுனர் நிகழ்வில் தேசிய மட்டத்தில் பதக்கம் பெறுதல்.
- போதையற்ற மாணவர் சமூகத்தை உருவாக்குதல்.
- மாணவர்களை ஆங்கில, சிங்கள மொழிகளில் தேர்ச்சியடைய வைத்தல்.

## பாடசாலைத்தேவைகள்

- டிஜிற்றல் முறையிலான காட்சிப்படுத்தல் வசதிகள்.
- விளையாட்டு மைதானம்.
- உள்ளக ,வெளியக விளையாட்டு உபகரணம்.
    - வாகன பாதுகாப்பிடம்.
    - விஞ்ஞான ஆய்வுகூடத்தரை மாபிள் கற்கள் பதித்தல்
    - பாடரீதியான மடிக்கணினிகள்.
    - பிரதான மண்டபத்தின் கூரை திருத்தல்.
    - அழகியல் பாடத்திற்கான செயற்பாட்டறைகள்
    - அலுவலகத்தை நவீனமயப்படுத்தல்
    - பாடசாலை நுழைவாயிலை அழகுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறும் மாணவர் விபரம்

## ஆரம்பக் கல்வியில் பரிசில் பெறுவோர்

ஆரம்ப பிரிவு மாணவர்கள்

தரம் 1 – 5 வரை (பரிசு பெறுபவர்கள்)

| தரம் | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| தரம் 1 | ர. வருண் | தமிழ் , சுற்றாடல், கணிதம் |
| | தி. தனுசா | தமிழ் , சுற்றாடல், கணிதம் |
| | ல. சுலேஜிகா | தமிழ் , சுற்றாடல், கணிதம் |
| | | |
| தரம் 2 | ஆ. தபஸ்யா | தமிழ் , சுற்றாடல், கணிதம்,சமயம் |
| | ச. தீபிகன் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல் |
| | கே. பிரதீஸ் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம் |
| | வி. சஞ்செய் | கணிதம், ஆங்கிலம், சமயம், ஆங்கிலம் |
| தரம் 3 | சு. கன்சிகா | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் |
| | மு. சோபிகா | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் |
| | சு. விஷ்வா | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் |
| தரம் 4 | கி. நிதுர்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| | நி. ரிஷானா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| | ற. கஸ்வின் | தமிழ், ஆங்கிலம், சமயம் |
| | சு. யஸ்மிர் | ஆங்கிலம், சுற்றாடல் |
| | கி. கிசான் | கணிதம் |
| தரம் 5 | யோ. நவீன் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் |
| | ஆ. வைஸ்ணவி | கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் |
| | பா. கேனுஜா | தமிழ், சுற்றாடல், கத்தோலிக்கசமயம் |
| | கு. சானுஜா | ஆங்கிலம், கத்தோலிக்கசமயம் |
| | த. தட்சாயினி | தமிழ், சமயம் |
| | இ. சதுநிசன் | கணிதம் |

## இடைநிலைப் பிரிவு பரிசில் பெறுவோர்

| தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடங்கள் |
|---|---|---|
| 6 | வி. சஞ்சைய் | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், செயன்.தொ.நு, சுகாதாரம் |
| | பி. கிஷானந் | தமிழ் ,ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சங்கீதம், செயன்.தொ.நு |
| | ச. ஹிந்துயன் | சமயம், வரலாறு, புவியியல், சங்கீதம், செயன்.தொ.நு, சுகாதாரம் |
| | செ. கம்சாயினி | தமிழ் ,சமயம், கணிதம், நடனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | கு. சதுஜா | ஆங்கிலம், விஞ்ஞானம், கிறஸ்தவம் |
| | து. சொப்னா | குடியுரிமை, செயன்.தொ.நு, சுகாதாரம் |
| | ய. யஸ்மிதா | நடனம் |
| | நி. நிஸ்சிகா | நடனம் |
| | கு. சாம்சிகா | சித்திரம் |
| | சி. திபிசன் | சித்திரம் |
| 7 | கே. அஸ்மினி | தமிழ் ,சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், செயன்.தொ.நு, சுகாதாரம் |
| | எ. மதுமிதா | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சித்திரம், செயன்.தொ.நு, சுகாதாரம் |
| | ச. பிரியா | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், குடியுரிமை, நடனம், சுகாதாரம் |
| | ச. விதுசன் | விஞ்ஞானம் |
| | பி. பியன் | கணிதம் |
| 8 | க. தர்சிகா | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், செயன்.தொ.நு, சுகாதாரம் |
| | சு. ராகுல் | தமிழ் ,சமயம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சித்திரம், செயன்.தொ.நு |
| | கு. சாகித் | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், குடியுரிமை, செயன்.தொ.நு |
| | ப. சுபானுஜா | நடனம் |
| 9 | ச. அபிராம் | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், செயன்.தொ.நு, குடியுரிமை, சித்திரம், சுகாதாரம் |
| | க. விதுசியா | தமிழ் ,சமயம், விஞ்ஞானம், சுகாதாரம், குடியுரிமை |
| | தி. திவ்யா | சமயம், வரலாறு, குடியுரிமை, செயன்.தொ.நு |
| | பா. நீருஜா | தமிழ் ,சமயம், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், செயன்.தொ.நு, சுகாதாரம், நடனம் |
| | பி. யதுஷா | ஆங்கிலம், புவியியல் |
| | யோ. தனுராஜ் | சங்கீதம் |
| | றொ. யதுசன் | கிறிஸ்தவம் |
| | ச. ரேனுசன் | விஞ்ஞானம் |
| 10 | அ. சயனுஜா | தமிழ் ,சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், நடனம், தகவல் தொழி |
| | ஜெ. ஜெனிஸ்ரன் | சமயம், ஆங்கிலம், குடியியல், சுகாதாரம், சித்திரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | உ. கஜவிந் | சமயம், ஆங்கிலம் வரலாறு, குடியியல், சுகாதாரம் |
| | பி. செவ்வந்தி | தமிழ், குடியியல், நடனம் |
| | பி. பிரவீனா | கிறிஸ்தவம், சுகாதாரம், நடனம் |
| | பி. டன்சன் | சித்திரம், விஞ்ஞானம் |
| | சி. சோழநிலவன் | கணிதம், வர்த்தகம், சங்கீதம் |
| | சி. அஸ்வினியா | நடனம் |
| 11 | ச. சகிசன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, சங்கீதம், தகவல் தொழி |
| | கு. நவசாயினி | நடனம், சுகாதாரம், சமயம், ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம், தமிழ் |
| | சி. சிவராஜ் | புவியியல், சித்திரம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமயம், ஆங்கிலம், வரலாறு |
| | ஸ்ரீ. லாமதி | கிறிதவம், வணிகம், கணிதம் |
| | ரா. சங்கவி | சித்திரம் |

## க. பொ. த (சா / த) – 2021 சித்திபெற்று உயர்தரம் கற்கும் மாணவர்கள்

செல்வி பி. சதுஸ்ரலா

செல்வி ர. சுவி

## மாணவர் வரவு

| இல | தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | 01 | ற. வருண் | வரவு |
| 2. | 02 | ஆ. தபஸ்யா | வரவு |
| 3. | 03 | சு. விஷ்வா | வரவு |
| 4. | 04 | ற. கஸ்வின் | வரவு |
| 5. | 04 | சு. யஸ்மிர் | வரவு |
| 6. | 05 | ஆ. வைஸ்ணவி | வரவு |
| 7. | 06 | வி. சஞ்சைய் | வரவு |
| 8. | 07 | எ. மதுமிதா | வரவு |
| 9. | 08 | சு. ராகுல் | வரவு |
| 10. | 09 | பா. நீருஜா | வரவு |
| 11. | 10 | சி. சோழநிலவன் | வரவு |
| 12. | 11 | சி. லாமதி | வரவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்.

01. இ. சதுநிசன்

02. யோ. நவீன்

03. ஆ. வைஷ்ணவி

04. கு. சானுஜா

05. த. தட்சாயினி

06. பா. கேனுஜா

07. வி. ஜஸ்வர்யா

08. வ. கஸ்வினி

09. சி. அபிஷன்

10. தி. யசிவன்

## இணைப் பாடவிதான மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்.

மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி கோட்டமட்டம்

| பெயர் | நிலை | நிகழ்ச்சி |
|---|---|---|
| பி. சதுஸ்ரலா | 1ம் இடம் | தட்டெறிதல் |
| சி. லாமதி | 3ம் இடம் | 100 மீற்றர் |
| சி. சோழநிலவன் | 3ம் இடம் | குண்டெறிதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பட்டு மகிழ்வோம் கோட்ட மட்டம்

| தரம் 5 | நிலை |
|---|---|
| பி. கிஷானந் | இரண்டாம் இடம் |
| வி. சஞ்சைய் | இரண்டாம் இடம் |
| ச. கிந்துஜன் | இரண்டாம் இடம் |
| க. டினுஸ்கான் | இரண்டாம் இடம் |
| சி. றொசான் | இரண்டாம் இடம் |
| சு. சொப்னா | இரண்டாம் இடம் |
| நி. நிக்சிகா | இரண்டாம் இடம் |
| அ. அனித்தா | இரண்டாம் இடம் |
| ப. சுஜா | இரண்டாம் இடம் |
| ய. யஸ்மிதா | இரண்டாம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு ஆர்வத்துடன் பல்வேறு வழிகளில் உதவியவர்களை மறக்க முடியாது. அந்த வகையில் பாடசாலை நீர் விநியோகத்தை சீராக்குவதற்கு புதிய மின்மோட்டர் ஒன்றினை வழங்கி உதவிபுரிந்த திருமதி சுசீலாமணி பஞ்சலோகரஞ்சன் அவர்களுக்கும் பிரதான மண்டபத்தை அழகுற வர்ணப்பூச்சை செய்து தந்த எமது ஆசிரியை திருமதி நவநீதகாந்தன் திருமகள் அவர்களுக்கும் மற்றும் ஆரம்பப்பிரிவு வகுப்பறைக்கு அரங்க மூலைகளுக்கான சிறு மேடைகள் மற்றும் கதிரை மேசைகளுக்கான வர்ணப்பூச்சுக்களையும் செய்து தந்ததோடு சிறுவர் முற்றத்தை மிக அழகுற சீராக்கியதுடன் நீண்ட கால தேவையாக இருந்த போட்டோ பிரதி இயந்திரத்தையும் அன்பளிப்புச்செய்த VEEN-IX மௌலீசன் பிரேமதாசன் குடும்பத்தினருக்கும் வகுப்புகளுக்கு வர்ணப்பூச்சைச் செய்து கவின்நிலைப்படுத்திய லண்டன் வாழ் திரு சுரேஸ்குமார் அவர்களுக்கும் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு விழாக்களுக்கு நிதியுதவி செய்யும் ஓய்வு நிலை ஆசிரியர் செல்வி பானுமதி செல்வரட்ணம் அவர்களுக்கும் விளையாட்டுப்போட்டிகள் பரிசளிப்பு விழாக்களுக்கும் பரிசில்களை வழங்கி வருவதுடன் பல்வேறு உதவிகளையும் பெற்று பாடசாலைக்கு வளர்ச்சிக்கு உதவி வரும் எமது பாடசாலையின் உப அதிபர் செல்வி சி. மாலதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு நம்பிக்கை நிதியத்தில் நிதியை வைப்புச்செய்து எமக்கு நிதியுதவி வழங்கியவர்களான திரு சுப்ரமணியம் பவளம் ரட்ணசபாபதி அவர்களுக்கும் செல்வி நிஷேவிதா சண்முகராஜா அவர்களுக்கும் திருமதி சர்மினி கதிர்காமநாயகன் அவர்களுக்கும் திருமதி சாந்தா சுகிர்தரஞ்சன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய அனைவருக்கும் எம்மோடு இணைந்து செயற்பட்ட பழைய மாணவர்களுக்கும் பாடசாலை சமுகத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு பரிசில் தின அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org